ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

ஆண்டாள் அருளிச்செய்த

# ॥ கோழியழைப்பதன் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iittam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கோழியழைப்பதன் ॥

கவர்ந்த கூறைகளை வேண்டிக் கன்னியர் கண்ணனை இரத்தல்

‡கோழி அழைப்பதன் முன்னம்⋆
குடைந்து நீராடுவான் போந்தோம்⋆
ஆழியம் செல்வன் எழுந்தான்⋆
அரவணை மேல் பள்ளி கொண்டாய்⋆
ஏழைமை ஆற்றவும் பட்டோம்⋆
இனி என்றும் பொய்கைக்கு வாரோம்⋆
தோழியும் நானும் தொழுதோம்⋆
துகிலைப் பணித்தருளாயே (1)

இதுவென் புகுந்ததிங்கந்தோ!⋆
இப்பொய்கைக்கெவ்வாறு வந்தாய்⋆
மதுவின் துழாய் முடி மாலே!⋆
மாயனே! எங்கள் அமுதே!⋆
விதி இன்மையால் அது மாட்டோம்⋆
வித்தகப் பிள்ளாய்! விரையேல்⋆
குதிகொண்டரவில் நடித்தாய்!⋆
குருந்திடைக் கூறை பணியாய் (2)

எல்லே! ஈதென்ன இளமை⋆
எம் அனைமார் காணில் ஒட்டார்⋆
பொல்லாங்கீதென்று கருதாய்⋆
பூங்குருந்தேறி இருத்தி⋆
வில்லால் இலங்கை அழித்தாய்!⋆
வேண்டியதெல்லாம் தருவோம்⋆
பல்லாரும் காணாமே போவோம்⋆
பட்டைப் பணித்தருளாயே (3)

பரக்க விழித்தெங்கும் நோக்கிப்⋆
    பலர் குடைந்தாடும் சுனையில்⋆
அரக்க நில்லா கண்ண நீர்கள்⋆
    அலமருகின்றவா பாராய்⋆
இரக்கமேல் ஒன்றும் இலாதாய்!⋆
    இலங்கை அழித்த பிரானே⋆
குரக்கரசாவதறிந்தோம்⋆
    குருந்திடைக் கூறை பணியாய் (4)

காலைக் கது விடுகின்ற⋆
    கயலொடு வாளை விரவி⋆
வேலைப் பிடித்தென்னை மார்கள்
    ஓட்டில்⋆ என்ன விளையாட்டோ⋆
கோலச் சிற்றாடை பலவும்
    கொண்டு⋆ நீ ஏறியிராதே⋆
கோலம் கரிய பிரானே!⋆
    குருந்திடைக் கூறை பணியாய் (5)

தடத்தவிழ் தாமரைப் பொய்கை⋆
    தாள்கள் எம் காலைக் கதுவ⋆
விடத் தேள் எறிந்தாலே போல⋆
    வேதனை ஆற்றவும் பட்டோம்⋆
குடத்தை எடுத்தேற விட்டு⋆
    கூத்தாட வல்ல எம் கோவே⋆
படிற்றை எல்லாம் தவிர்ந்து⋆ எங்கள்
    பட்டைப் பணித்தருளாயே (6)

நீரிலே நின்றயர்க்கின்றோம்⋆
    நீதி அல்லாதன செய்தாய்⋆
ஊரகம் சாலவும் சேய்த்தால்⋆
    ஊழி எல்லாம் உணர்வானே!⋆
ஆர்வம் உனக்கே உடையோம்⋆
    அம்மனை மார் காணில் ஒட்டார்⋆

போர விடாய் எங்கள் பட்டை⋆
    பூங்குருந்தேறி இராதே (7)

மாமிமார் மக்களே அல்லோம்⋆
    மற்றும் இங்கெல்லாரும் போந்தார்⋆
தூமலர்க் கண்கள் வளரத்⋆
    தொல்லை இராத் துயில்வானே!⋆
சேமமேல் அன்றிது சால⋆
    சிக்கென நாம் இது சொன்னோம்⋆
கோமள ஆயர் கொழுந்தே!⋆
    குருந்திடைக் கூறை பணியாய் (8)

கஞ்சன் வலை வைத்த அன்று⋆
    காரிருள் எல்லில் பிழைத்து⋆
நெஞ்சு துக்கம் செய்யப் போந்தாய்⋆
    நின்ற இக்கன்னியரோமை⋆
அஞ்ச உரப்பாள் அசோதை⋆
    ஆணாட விட்டிட்டிருக்கும்⋆
வஞ்சகப் பேய்ச்சிபால் உண்ட⋆
    மசிமையிலீ! கூறை தாராய் (9)

‡கன்னியரோடெங்கள் நம்பி⋆
    கரிய பிரான் விளையாட்டைப்⋆
பொன் இயல் மாடங்கள் சூழ்ந்த⋆
    புதுவையர் கோன் பட்டன் கோதை⋆
இன்னிசையால் சொன்ன மாலை⋆
    ஈரைந்தும் வல்லவர் தாம் போய்⋆
மன்னிய மாதவனோடு⋆
    வைகுந்தம் புக்கிருப்பாரே (10)

‖ ஆண்டாள் திருவடிகளே சரணம் ‖